எம்.சி. 7/2023 அ.சா.1 காந்திமதி த/பெ.சின்னசாமி வயது 45 13.12.2023.

<u>(எதிர்மனுதாரர் ஆஜர்)</u>

ம.சா. 1 குறுக்கு விசாரணை

நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். இம்மனுவானது எனக்காகவும், குழந்தைக்காகவும் சேர்த்து போடப்பட்டது என்றால் சரிதான். குழந்தை யாரிடம் உள்ளது என்றால் எதிர் மனுதாரரிடம் உள்ளது. குழந்தை 02.01.2014 ம் ஆண்டு பிறந்தது. குழந்தை பிறந்து 3 வருட காலம் வரை சேர்ந்து தான் வாழ்ந்து வந்தோம். எதிர்மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ வேண்டும் என்று ஒரு வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். இன்றைய தேதி வரை நான் அவருடன் சேர்ந்து வாழ்வதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர் என்னுடன் வாழ தயாராக இருக்கும் நிலையில் நான் அவருடன் வாழ தயாராக இல்லை என்றால் சரிதான்.

நான் எதற்கு எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழவில்லை என்றால் எனது உயிருக்கு ஆபத்து உள்ளது. இதை குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. என்னை கொடுமை செய்ததற்காக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் பயத்தினால் கொடுக்கவில்லை. தற்போது எனது தந்தை வீட்டில் வாழ்ந்து வரும் நிலையில் தற்போதும் புகார்கொடுக்கவில்லை என்றால் சரிதான். குடும்பத்தில் பஞ்சாயத்து பேசப்பட்டது என்றால் சரிதான். 2020ம் ஆண்டு பஞ்சாயத்து நடைபெற்றது. சேர்ந்து வாழ்வதற்காக பஞ்சாயத்து போடப்பட்டது என்றால் சரிதான். பஞ்சாயத்து தாரர்கள் சேர்ந்து வாழும் படி சொல்லியபின்பும் நான் சேர்ந்து வாழவில்லை என்றால் சரிதான். சேர்ந்து வாழ்வதற்கான மனு எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் அதில் சேர்ந்து வாழ விருப்பம் என நான் பதிலுரை தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. அந்த வழக்கிலும் இடைக்கால் ஜீவனாம்சம் கேட்டு மனு தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கு விவரம் தற்போது வரை எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

நான் வீட்டிற்கு ஒரே பிள்ளை என்றால் சரிதான். அதனால் எனது பெற்றோருடன் வாழ்வதற்காக எதிர் மனுதாரருடன் வாழ செல்லவில்லை என்றால் சரியல்ல. எனது தந்தைக்கு சொத்து உள்ளது என்றால் சரிதான். எனது தந்தை வெளியே கடன் கொடுக்கும் தொழில் செய்து வருவதால் அதனுடைய வட்டியை பெறுவதற்கு ஆண் வாரிசு இல்லாத காரணத்தினால் அவருடன் சென்று விட்டேன் என்றால் சரியல்ல.

திருமணத்தின் போது போட்ட 1 சவரன் நகையும் என்னிடத்தில் தான் உள்ளது என்றால் சரியல்ல. எதிர்மனுதாரருடன் சண்டை போட்டுக்கொண்டு செல்லும்போது 1 சவரன் நகை மற்றும் குழந்தைக்கு போட்ட 2 சவரன் நகையையும் எடுத்து சென்று விட்டேன் என்றால் சரியல்ல.

பஞ்சாயத்தின்போதே எனக்கு சேர வேண்டிய பணம், நகைகள், சாமான்கள் கொடுத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. பஞ்சாயத்து பேசிய ஊர்கவுண்டரை சாட்சியாக அழைப்பதில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்றால் சரிதான். திருமணம் ஆன 10 நாட்களுக்குள் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். தலையில் காயம் ஏற்பட்டு கோமா நிலையில் இருந்து வந்தார் என்றால் சரிதான், அதற்கும் எனது தந்தை தான் செலவு செய்தார், எதிர்மனுதாரரின் பெற்றோர்கள் தான் செலவு செய்தார்கள் என்றால் சரியல்ல. அவருக்கு தலையில் ஏற்பட்ட காயத்தினால் அதனுடைய தாக்கம் இன்னால் வரை இருந்து வருகிறது என்றால் சரிதான், ஆனால் அவர் வேலைக்கு சென்று கொண்டு தான் இருக்கிறார். எதிர்மனுதாரரை அவரது பெற்றோர் தான் பார்த்து வருகிறார்கள் மற்றும் குழந்தையை அவர்கள் தான் செலவு செய்து பார்த்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

குழந்தையை கேட்டு நான் மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் செய்துள்ளேன். அதனுடைய வாய்தா தேதி என்னவென்றால் அதை குறித்து இன்னும் சொல்லவில்லை. அவ்வாறு நான் வழக்கும் தாக்கல் செய்யவில்லை, குழந்தை எதிர்மனுதாரருடன் தான் வாழ்ந்து வருகிறது என்றால் சரியல்ல. நான்தான் மனைவி என்ற கடைமையை தவறி பெற்றோர்களின் துர்போதனையை கேட்டு எதிர்மனுதாரருடன் வாழவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரை நான் சட்டத்திற்குட்பட்ட எவ்வித காரணமும் இல்லாமல் பிரிந்து வாழ்ந்து வருகிறேன் என்றால் என்னை கொடுமை செய்தார், என்ன கொடுமை செய்தார் என்றால் எனக்கு எதுவும் வாங்கி தராமல் பெற்றோரிடமே வாங்கி வர சொன்னார். குழந்தையை படிக்க வைப்பதற்கும் பெற்றோரிடமே வாங்கி வர சொன்னார் இல்லை என்றால் அரசு பள்ளியில் தான் படிக்க வைப்பேன் என்று சொன்னார். மேற்படி கொடுமைகள் விவரத்தை நான் என்னுடைய மனுவில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

நான் உழவர் சந்தைக்கு காய்கறி விற்பனை செய்வதற்கு சென்று வருகிறேன் என்றால சரியல்ல. தேங்காய் வெட்டும் போது அந்த தேங்காயை விற்று வருவதற்காக மட்டும் சென்று வருவேன்.

எதிர்மனுதாரர் என்ன பதிலுரை தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் தெரியாது. எதிர்மனுதாரர் காய்கறி கமிஷன் பெற்று வருகிறேன் என்று சொன்னால் அது சரியல்ல. எனது பெற்றோர் எதிர்மனுதாரருடன் வாழ்ந்தால் சொத்து கிடையாது என்று சொன்னதால் நான் எதிர்மனுதாரருடன் வாழவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் என்ன வேலை செய்கிறார் என்றால் விவசாயம் செய்கிறார், மேஸ்திரி வேலைக்கு செல்வார் மற்றும் பைனான்ஸ் தொழில் செய்து வருகிறார். பைனான்ஸ் கம்பெனியின் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. மேஸ்திரி வேலை செய்வதை குறித்து நான் மனுவில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. வழக்கறிஞர் தட்டச்சு செய்யப்பட்டு இருந்ததில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். அதனால் வழக்கறிஞர் என்ன தட்டச்சு செய்தார் என்று தெரியாது என்றால் சரியல்ல, படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன்.

விவசாயம் எந்த சர்வே எண்ணில் செய்து வருகிறார் என்றால் சர்வே எண் தெரியாது, ஈச்சம்பட்டு மற்றும் மேல்குப்பம் 2 ஊர்களிலும் அவர் விவசாயம் செய்து வருகிறார். 2 ஊர் கிராம நிர்வாக அலுவலர்களை வரவழைத்து நிலம் உள்ளதா என்று பார்க்க ஆட்சேபனை உள்ளதா என்றால் இல்லை. எதிர்மனுதாரரின் பேரில் நிலம் உள்ளதா என்றால் எதிர்மனுதாரரின் பேரில் இல்லை, அவரது பெற்றோரின் பேரில் உள்ளது, அது அவர்கள் சுயமாக சம்பாதித்தது என்றால் சரிதான். எதிர்மனுதாரர் ரூ.50000 மாதம் வருமானம் உள்ளது பொய் என்றால் சரியல்ல. எவ்வளவு ஜீவனாம்சம் கேட்டுள்ளேன் என மனுவில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. ரூ. 20000 கேட்டுள்ளேன். எதிர்மனுதாரர் மாதம் ரூ.20000 ஐ கட்டுவதற்கு தகுதியானவர் இல்லை என்று தெரிந்து தான் நான் மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, அவர் தகுதியானவர் தான். ரூபாய் எதற்கு வேண்டும் என்று நான் மனுவில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர் மனதளவிலும் உடலளவிலும் பாதிக்கப்பட்டவர், ஜீவனாம்சம் கொடுக்க கடமைபட்டவர் அல்ல என்றால் சரியல்ல. எனது தந்தை சொத்திற்காக நான் எதிர்மனுதாரருடன் வாழ மறுக்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் இந்நாள் வரை வாழ விருப்பம் தெரிவிப்பதால் இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

(எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)

சாட்சி கையொப்பம்
(ஒம்.) காந்திமதி

Taken down by me in open court and read over to the witness in the presence of the accused and admitted by the witness to the correct.

(Sd./-) R.S.Praganthaa,
Judicial Magistrate, Vaniyambadi.